Tamil Medium

# 08 TNPSC GROUP II / IIA MAINS SCERT - SCIENCE & TECHNOLOGY QUESTION WITH ANSWER

## 8. உயிரிய பல்வகைத்தன்மை மற்றும் அதன் பாதுகாப்பு பற்றி விவரிக்க.

**ஐ.நா. புவி உச்சி மாநாடு 1992 :**

- "நிலம், கடல், பிற நீர் சூழ்நிலை மண்டலங்கள் மற்றும் நாம் பங்கு கொள்கின்ற சூழலியல் கூட்டுத்தொகுதி உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களில் இருந்தும் வருகின்ற அனைத்து உயிரினங்களிடையே காணப்படும் வேறுபாடுகள்".

**ஸ்டாக்ஹோம் பிரகடனம் (1972) :**

- எதிர்கால சந்ததியாரின் நன்மைக்காக இயற்கை வளங்களை திட்டமிட்டு மேலாண்மை செய்து சுற்றுச்சூழலை – சூழல் மண்டலங்களை பாதுகாக்க வேண்டும்.

**நோக்கம் :**

- சிற்றினங்கள், அவற்றின் வாழிடம் மற்றும் அவற்றின் சூழ்நிலை மண்டலங்களை சீரழிவில் இருந்து பாதுகாத்தல்.

**உத்திகள் :**

1. அபாயத்தில் உள்ள அனைத்து சிற்றினங்களை அடையாளம் காணுதல் & பாதுகாத்தல்.
2. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த உயிரிகளை பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாத்தல்.
3. வள உயிரினங்கள் பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்துதல்.

பாதுகாப்பு உத்தி அம்சங்கள்

**சூழல் உள் பாதுகாப்பு**

1. பாதுகாக்கப்பட்ட பகுதிகள்
2. தேசிய பூங்காக்கள்
3. வனவிலங்கு புகலிடங்கள்
4. உயிர்க்கோளக் காப்பகம்
5. புனிதத் தோப்புகள்

**சூழல் வெளி பாதுகாப்பு**

1. வெளிப்புறச் சேகரிப்பு
2. மரபணு வங்கிகள்

SURESH'

**சூழல் உள் பாதுகாப்பு :**

- உயிரினங்களின் மரபியல் வளத்தை இயற்கையான (அ) மனிதனால் உருவாக்கப்பட்ட சூழ்நிலை மண்டலங்களில் பாதுகாத்தல்.
- இயற்கையான வாழிடத்தில் பாதுகாத்தல்.

**அ) பாதுகாக்கப்பட்ட பகுதிகள் :**

- சட்டப்பூர்வமான முறையில் பராமரிக்கப்படுகிறது.
- உலகில் 37,000 பாதுகாக்கப்பட்ட பகுதிகள்.
- இந்தியாவில் 771 பகுதிகள்.

**ஆ) தேசிய பூங்காக்கள் :**

- மாநில அரசால் அறிவிக்கப்பட்ட இயற்கை வாழிடம் பகுதியாகும்.
- வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் - 1972 பகுதி IV ல் மனித செயல்பாடுகளுக்கு அனுமதியில்லை.
  - மாநில முதன்மை வன உயிரி பாதுகாவலர் அனுமதி தேவை.
- இந்தியாவில் 104 உள்ளது.
- வேட்டையாடுதல், மேய்ச்சல் போன்றவை தடை
- தமிழ்நாட்டில் கிண்டி, முதுமலை தேசிய பூங்காக்கள்.

**இ) வனவிலங்கு புகலிடம் :**

- சூழ்நிலையியல், இயற்கை மற்றும் விலங்கியல் முக்கியத்துவம் பெற்ற பகுதிகளை மாநில அரசு அறிவிக்கலாம்.
  - காப்புக்காடுகள், நீர்நிலைகள் தவிர
- **நோக்கம் :**
  - அழியும் நிலையில் உள்ள உயிரினங்களை பாதுகாத்தல்.
- வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் - 1972 - பிரிவு VI
  - வரையறுக்கப்பட்ட மனித நடவடிக்கைகள்
  - சுற்றுலா அனுமதி
- இந்தியாவில் 544 புகலிடங்கள்

**ஈ) உயிர்கோளக் காப்பிடங்கள் :**

- நில / கடல் / கடற்கரை சூழ்நிலை மண்டலம் மற்றும் இவை கலந்து காணப்படும் சூழ்நிலை மண்டலங்களில் விரிந்து காணப்படும் இயற்கை / கலாச்சார தோற்றத்தின் மாதிரிப் பகுதி என யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

SURESH'

- உயிர்க்கோள காப்பிடங்கள் திட்டம் – யுனெஸ்கோவின் மனிதன் மற்றும் உயிர்க்கோள திட்டம் வழிநடத்துகிறது.
- இந்தியா 1986ல் கையொப்பமிட்டது.
- நாட்டில் 18 உள்ளது.

**உ) புனித தோப்புகள் :**

- மத ரீதியான சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை.
- புனித தோப்புகள் (அ) புனித மரங்கள்

**சூழல் வெளி பாதுகாப்பு :**

- தேர்ந்தெடுக்கப்பட்ட அரிய / தாவர உயிரினங்களை (அ) விலங்கினங்களை இயற்கை வாழிடங்களுக்கு வெளியே பாதுகாத்தல்.

**அ) வெளிப்புற சேகரிப்பு :**

- வன உயிரினங்கள் மற்றும் வளர்க்கப்படும் உயிரினங்கள் இங்கு சேர்க்கப்படுகிறது.
    1. தாவரவியல் பூங்கா
    2. விலங்கியல் பூங்கா
    3. ஆர்போரிட்டா
- **சிறப்பு :**
- மரபற்றுப் போன உயிரினங்கள் கூட விலங்கியல் பூங்காக்களில் பராமரிக்கப்படுகிறது.
- சிறைப்பட்ட நிலையில் இனப்பெருக்கம் அதிகரிக்கிறது.
- இந்திய முதலை மற்றும் கங்கை டால்பின் ஆகிய இனங்கள் காப்பாற்றப்பட்டது.

**ஆ) மரபணு வங்கிகள் :**

- மரபணு பொருட்களை பாதுகாக்கும் ஓர் உயிர் களஞ்சியம்
- வணிக ரீதியான பல்வேறு தாவர விதைகள் நீண்ட காலம் சேமிக்கலாம்.

| சூழல் உள் பாதுகாப்பு | | சூழ் வெளி பாதுகாப்பு | |
|---|---|---|---|
| 1. | அவற்றிற்குரிய தளங்கள் / இயற்கை சூழலில் பாதுகாத்தல் | 1. | தனிப்பட்ட இடங்களில் வைத்து சிறப்பாக பாதுகாத்தல் |
| 2. | கொன்றுண்ணி விலங்குகளில் இருந்து பாதுகாத்தல் | 2. | மரபற்று போவதிலிருந்து பாதுகாத்தல் |
| 3. | தேசிய பூங்காக்கள், வனவிலங்கு புகலிடம் | 3. | விலங்கியல் பூங்காக்கள் |